

பம்மலில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்டக் கழக நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விசுவநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நாமக்கல் மாநகராட்சி, பழைய அரசு மருத்துவமனையில் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் பிற பணிகளில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார். உடன், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் திருமதி.மு.விஜயலட்சுமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ., மேயர் து.கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பட்டி தொட்டி யெங்கும் – துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!



**காஞ்சிபுரம், நவ. 3 - கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பட்டி தொட்டி யெங்கும் “எளியோர் எழுச்சி நாளாக” எழுச்சியுடன் கழகத்தினர் அனைவரும் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்திடுவோம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் சந்திப்பு அருகில் அமைந்துள்ள எஸ்.எஸ்.மகால் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணா நிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், பத்மபிரியா, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், எஸ்.இந்திரன், பெருங்களத்தூர் சேகர், ஏ.கே.கருணாகரன், ஆர்.சுரேஷ், இ.எஸ்.பெர்னாட், ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, ஆப்பூர் பி.சந்தானம், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, டி.பி.செந்தில்குமார், வி.ரவிச்சந்திரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப் பட்ட தீர்மானங்கள்:

தமிழ்நாட்டில் உள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் தி.மு.க.கூட்டணி அதிக வாக்குகள் பெறுவதற்கு இலக்கு நிர்ணயித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்,

நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், “என் வாக்குச்சாவடி! வெற்றி வாக்குச்சாவடி !!” என்ற பயிற்சிக் கூட்டத்தை மாமல்லபுரத்தில் நடத்தி கழக நிர்வாகிகளை ஊக்கப்படுத்தியதோடு

“என்னுடைய வாக்குச்சாவடியில் அதிக அளவில் வெற்றி பெற்று தி.மு.க. கூட்டணியை வெற்றி பெறச் செய்திடுவேன் என்று ஒவ்வொரு கழகத் தொண்டனும் உறுதியேற்று களப்பணியாற்றினால்,

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாக்குச்சாவடியிலும் தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்று 2026ல் 7வது முறையாக கழக ஆட்சி உறுதியாகிவிடும்” என்று நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று,

தமிழ்நாட்டில் 7வது முறையாக கழகத்தின் நல்லாட்சி அமைந்திடவும், நாடும் நாட்டு மக்களும் போற்றி பாராட்டும் வகையில் அற்புத ஆட்சி நடத்தி வரும் நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இலா, அன்புத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக அரியணையில் அமர்ந்திடவும்,

நம்முடைய மாவட்டத்தில உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத்தின் அடிமட்டத் தொண்டன் வரை ஒன்றிணைந்து தேனீக்களைப் போல

சுறுசுறுப்பாகப் பணியாற்றி வெற்றிக்கனியை நம்முடைய ஒப்பரும் - மிக்காரும் இலா அன்புத்தலைவர், தளபதி அவர்களின், பொற்பாதங்களில் சமர்ப்பிப்போம்,

என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் சங்கநாதமிட்டி சூளுரைப்போம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

மக்களின் வாக்குரிமையை பறிக்கும் S.I.R. எனும் சதிவலையை பீகாரில் அரங்கேற்றியதைப் போல தமிழ்நாட்டிலும் அரங்கேற்ற என்றும் பா.ஜ.க.வின் சதிவலையை தடுத்திடவும்.

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும், நவம்பர் 4ஆம் தேதி முதல் டிசம்பர் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள S.I.R. எனப்படும் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தத்தை கழகத்தினர் அனைவரும் இணைந்து சிறப்பான முறையில் எதிர்கொள்வது என்றும்,

2025ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள தற்போதைய வாக்காளர்கள் அனைவருக்கும் அந்தந்த வாக்குச்சாவடி BLOவாக்குச்சாவடி அலுவலர் வீடு வீடாகச் சென்று

S.I.R. படிவத்தை வாக்காளர்களுக்கு வழங்கும் போது அந்தந்த வாக்குச்சாவடிகளின் BLA2 அனைவரும் BLOக்கு உதவிடலாம் என்றும், அதே போல வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தை நிரப்ப BLO உதவுவார்கள் என்றும் இப்பணிக்கும் BLA2 அனைவரும் உதவிடலாம் என்றும்,

BLO வீடு வீடாக கணக்கெடுப்பு படிவங்களை வழங்கச் செல்லும் போது BLA2 அனைவரும், ஏற்கனவே கணக்கெடுத்துள்ள நோட்டுப் புத்தகங்களை உடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

அப்புத்தகத்தில் குறித்து வைத்துள்ள விவரப்படி, இறந்தவர்கள் இடம்மாறியவர்கள் இரட்டைப்பிரிவு ஆகிய விரங்களை BLOவிடம் எடுத்துச்சொல்லி, அந்த வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவத்தை தராமல் செய்ய வேண்டும் என்றும்,

வாக்காளர்களிடம் வழங்கிய படிவத்தை பெறுவதற்கு - ஒவ்வொரு வீட்டிற்கும் 3 முறை BLO வருவார்கள் என்றும், அப்படி ஒரு வேளை BLO வரும்போது, பூர்த்தி செய்த கணக்கெடுப்பு படிவங்களை தராத வாக்காளர்களை BLA2 கண்டறிந்து, அவர்களிடம் இருந்து பூர்த்தி செய்த படிவங்களைப் BLA2 பெற்று, மொத்தமாக தினசரி 50 கணக்கெடுப்பு படிவங்களை BLO வசம் கொண்டு சென்று தரலாம் என்றும்.

வாக்காளர்களுக்கு நோட்டீஸ் அல்லது அறிவிப்பு வழங்குவார்கள் என்றும், நோட்டீஸ் பெற்றுக் கொண்ட வாக்காளர்கள் மட்டுமே, தங்களின் வாக்காளர் தகுதியை உறுதிப்படுத்த ஆதார் அட்டை நகல் அல்லது தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை இணைத்து தர வேண்டும் என்றும்,

வாக்காளர் தந்த ஆவணங்களை ஆய்வு செய்து, அதன் பின்னரே அவரது பெயர், பிப்ரவரி 7ஆம் தேதி வெயியிடப்பட உள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும், இப்பணிகள் அனைத்தையும் அந்தந்த வாக்குச்சாவடியின் BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இணைந்து செய்திடுவது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை, திராவிட இயக்கத்தின் தொடர் அத்தியாயமாக, 5ஆம் தலைமுறைத் தலைவராக உருவாகி உள்ள “இளைஞர் பட்டாளத்தின் இதயம் கவர்ந்த இளம் தலைவர்”

எளியோர் எழுச்சி நாளாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டி தொட்டி எங்கும் மிகவும் சிறப்பான முறையில், எழுச்சியுடன் கோலாகலமான வகையி கொண்டாடுவது என்றும்,

அவரது பிறந்த நாளன நவம்பர் 27ஆம் தேதி அன்று காலை 9.00 மணிக்கெல்லாம், மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் உள்ள அனைத்து வார்டு - கிளைக் கழகங்களில், கழக கொடி - தோரணங்களை அழகுற கட்டி, ஒலிபெருக்கிகளை அமைத்து, கழகக் கொடியை ஏற்றி இனிப்புகளை வழங்கிடுவது என்றும்,

நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றவர்களுக்கு அன்று மதிய உணவு மற்றும் உடைகளை வழங்குவது, ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

நம்முடைய மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நியமிக்கப்பட்டுள்ள, வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களை (BLCகளை) சரிபார்த்து, அவர்கள் ஒவ்வொரு BLCக்கும், ஏறத்தாழ 100 வாக்காளர்களை ஒதுக்கீடு செய்து,

BLCகளுக்கு ஒதுக்கப்பட்ட 100 வாக்காளர்கள் விவரங்களை மாவட்டக் கழகம் அச்சிட்டு தந்துள்ள படிவங்களில் பூர்த்தி செய்து தந்திட வேண்டும் என்றும்,

BDAக்கள் நிரப்பப்பட்ட படிவத்தின் புகைப்படத்தை செயலியில் பதிவேற்ற வேண்டும். இப்பணிகள் அனைத்தும் நவம்பர் 12ஆம் தேதிக்குள் செய்து முடிப்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் முடிவுகள் மாறி வரக்கூடிய FOCUS BOOTHS - SWING BOOTHகளை தலைமைக்கழகம் அடையாளம் கண்டறிந்து அனுப்பி உள்ள அனைத்து விவரங்களையும், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்களிடம் இன்று வழங்குவது என்றும்,

அந்த FOCUS SWING பூத்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு செயல் வீரர்கள் கூட்டம் நடத்தப்பட வேண்டும். இந்த பூத்களில் மழைக்கு பின்னர் தொடர் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

S.I.R. வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் செய்யும் பணிகள் நிறைவடைந்த பின்னர் டிசம்பர் 5ஆம் தேதி முதல் வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடியில் அடங்கியுள்ள கழக நிர்வாகிகள், BLA2, BLC, BDA, இளைஞர் அணி - மகளிர் அணி அடங்கிய வாக்குச்சாவடி குழுவினர் - சட்டமன்றத் தொகுதி வாரியாக தலைமைக்கழகம் வடிவமைத்து தந்துள்ள திராவிட மாடல நல்லாட்சியின் 4 ஆண்டு சாதனைகளை துண்டறிக்கையாக அச்சிட்டு வீடு வீடாகச் சென்று மக்கள் அனைவருக்கும் வழங்கி பரப்புரை

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் BDAக்கள் மூலம் வாட்ஸ்அப் குழுவை உருவாக்கிட வேண்டும் என்றும், நம்முடைய உயிரனைய தலைவர் தளபதி அவர்கள் விடுத்துள்ள அன்புக்கட்டளையை ஏற்று,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும் உடனடியாக வாட்ஸ்அப் குழுவை அமைத்திடும் இன்றியமையாப் பணியில் அந்தந்த வாக்குச்சாவடியின் BDAக்கள் ஈடுபடுவது என்றும்,

அத்துடன் BDAக்கள் வாட்ஸ்அப் குழுவில் அந்த வாக்குச்சாவடியில் அடங்கிய அனைத்து கழக நிர்வாகிகள் இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி நிர்வாகிகள், BLA 2, BLC, BDA மற்றும் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையின் போது உறுப்பினர்களாக இணைந்தவர்கள் உள்ளிட்ட அனைவரையும் அந்தந்த வாக்குச்சாவடி வாட்ஸ்அப் குழுவில் இணைத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

வருகிற டிசம்பர் 10ஆம் தேதிக்குள் வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடி (பூத் கூட்டம்) கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவுறுத்தியுள்ளபடி,

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2404 வாக்குச்சாவடிகளிலும் பூத் வாரியாக, பூத் கூட்டங்களை நடத்திடுவது என்றும்,

இந்த பூத் கூட்டங்களில் அந்தந்த பூத்துக்கு உட்பட்ட மாநில மாவட்ட மாநகர - ஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட,

அனைவரையும் பங்கேற்கச் செய்து மிகவும் எழுச்சியான முறையில் பூத் கூட்டங்களை நடத்திடுவது என்றும் இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 256 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



*சென்னை, நவ.3- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 256 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (02.11.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 78, தாணா தெரு, புரசைவாக்கம், 2) வட்டம் 77, தட்டாங்குளம், சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், பகுதி செயலாளர்கள்: வி.அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டாலின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

### தொகுதிப் பார்வையாளர் டாக்டர் நா.சந்திரபாபு பங்கேற்பு

# சோழிங்கநல்லூர் மத்திய பகுதி ஆலோசனைக் கூட்டம்!

## ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. அறிக்கை

*சென்னை, நவ. 3 - சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதி ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என பகுதிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ச.அரவிந்த் ரமேஷ் அவிவித்துள்ளார்.*

*சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் ச.அரவிந்தரமேஷ் விடுத்துள்ள அறிக்கையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி திமுக சார்பில் ஆலோசனை கூட்டம் இன்று (3. 11.2025 திங்கட்கிழமை) மாலை 6-30 மணி அளவில் சோழிங்கநல்லூர் கே.வி.எல்.திருமண மண்டபத்தில் (துலுக்கானத்தம்மன் கோயில் அருகில்) மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள BLA2, பாக முகவர்கள் BDA, பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் நான் (சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ்) தொகுதி பார்வையாளரும் தலைமை இலக்கிய அணி பொருளாளருமான டாக்டர் நா.சந்திரபாபு ஆகியோர் SIR என்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை முறியடிக்க 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை குறித்து ஆலோசனை கூறி பேசுகின்றனர்.*

*இக்கூட்டத்தில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் BLA2 பாகநிலை முகவர், BDA பூத்து டிஜிட்டல் ஏஜென்ட் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளனர்.*




மதுரவாயல் சட்ட மன்றத்தொகுதி. மதுரவாயல் தெற்குப் பகுதியில் அடங்கிய எட்டு வட்டங்களில் உள்ள 193 வாக்குச்சாவடி முகவர்கள் ( BLA2 ) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜென்ட் ( BDA )க்களுக்கு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டம் போரூர், சக்தி நகரில் உள்ள ராஜ் மஹாலில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொகுதிமேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.



எழும்பூர் சட்டமன்றத் தொகுதி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள்– BLA2 பாக சமூக வலைதள முகவர்கள்– BDA இளைஞரணி அமைப்பாளர்கள் – BYA அவசர ஆலோசனை கூட்டம் 02.11.25 நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு SIR செயல்பாடுகள் குறித்து விழிப்புடன் பொதுமக்களை சந்தித்து ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்து பாக முகவர்கள் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தல் பார்வையாளர் பி.எம்.யாழினி, கே.எஸ். ரவிச்சந்திரன், சரிதா மகேஷ் குமார் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு.எம்.சி, வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.